மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, கோரிக்கை வடிவத்தில் கொடுப்பார் என்றால் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வேல் முருகன், சொல்லுங்கள்.

(இ) காட்டுமன்னார்குடி வட்டம், பெண் வட்டாட்சியரை வீடு புகுந்து தாக்கியது

திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடி வட்டத்தில், வட்டாட்சியராகப் பணிபுரிகின்ற ஒரு பெண் அதிகாரியை ஒரு வன்முறைக் கும்பல், வீடு புகுந்து தாக்கி, இப்போது அந்த மாவட்டத்திலே பதட்டம் ஏற்பட்டு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது என்னுடைய கவனத்திற்கே வரவில்லை. (குறுக்கீடு) துறை சம்பந்தமான ஏதாவது பிரச்சினைக்கு நீங்கள் பரிகாரம் காண வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே சொல்லுங்கள்.

(ஈ) வெளிநாடுகளில் வேலைக்காகச் சென்று சிறையில் அடைக்கப்பட்டுக் கொத்தடிமைகளாக இருப்பவர்களை மீட்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 நாட்களுக்கு முன் தங்களிடத்திலே ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தமிழகத்திலே, படித்துவிட்டு வேலையில்லாதவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று வேலை பார்க்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு, இங்கே இருக்கக்கூடிய agency மூலமாக வேலைக்குச் செல்கிறார்கள். அப்படி வேலைக்குச் சென்ற இடங்களிலே அவர்கள் மிகக் கொடுமைப்படுத்தக்கூடிய நிலையிலே, மிகக் குறைவான சம்பளத்தைப் பெற்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி அவர்களுக்கு, அதாவது 300-க்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புத் அறிவிப்புகள் வந்திருக்கின்றன. நாம் எந்த அளவுக்கு ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்ள முடியுமோ, எடுத்துக் கொள்கிறோம். எல்லாப் பிரச்சினைகளுமே முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், இவ்வற்றையெல்லாம் நாம் எடுக்க

2001 செப்டம்பர் 14] [பேரவைத் தலைவர்]

வேண்டுமென்றால், ஆண்டு முழுவதும் சட்டமன்றக் கூட்டம் நடத்தினாலும் முடியாது. ஆகவே, சில பிரச்சினைகளைச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் கவனத்திற்கு நேரடியாகக் கொண்டு வாருங்கள். அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கையை எடுப்பார்கள். அதையும் மீறி ஏதாவது பிரச்சினை இருந்தால், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. ஜி.கே. மணி: இது முக்கியமான பிரச்சினை. நான் நீட்டித்துக் கொண்டே போகவில்லை. இப்படி மலேசியாவிலே 5,000 பேருக்கு மேலே, சிங்கப்பூரிலே 5,000 பேருக்கு மேலே கொத்தடிமைகளாக இருப்பது மாத்திரம் அல்லாமல், சிலபேர் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் சிறையிலே வாடிக் கொண்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதன் அடிப்படையிலே, எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்கள்கூட, கடந்த வாரம் மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களுக்குத் தகவல் கொடுத்து, தொலைபேசியிலும், தந்தி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் செய்தி கொடுத்திருக்கிறார்கள், அவர்களை மீட்டுக் கொண்டு வருவதற்கு. ஆகவே, சிறையிலே வாடக்கூடிய அந்த அப்பாவித் தமிழர்களை, கொத்தடிமைகளாக இருக்கக்கூடியவர்களை மீட்பதற்கு நம்முடைய தமிழக அரசு முன்வர வேண்டுமென்ற இந்தச் செய்தியை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினையை நீங்கள் கோரிக்கை வடிவத்தில் முதலமைச்சருக்கு எழுதிக் கொடுத்து விடுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . .

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

திரு. ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவினுடைய அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.